



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2026) சென்னை, வேப்பேரி, பி.கே.என். ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற விழாவில், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுபாட்டிலுள்ள சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில் 70 வயது பூர்த்தியடைந்த 500 மூத்த தம்பதியருக்கு புத்தாடைகள், பழ வகைகள் மற்றும் மங்கலப் பொருட்களை வழங்கி சிறப்பு செய்தார். இவ்விழாவில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதினம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தவத்திரு அப்பன் உலகாரிய இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் திருமதி ஆர்.பிரியா, தயாநிதிமாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம் சுற்றுலா மற்றும் அறநிலையங்கள் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில்

# 70 வயது பூர்த்தியடைந்த 500 மூத்த தம்பதியருக்கு பரிசுகள்!

## புத்தாடைகள் – மங்கலப் பொருட்கள் வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பு செய்தார்!

**சென்னை, பிப். 11 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2026) சென்னை, வேப்பேரி, பி.கே.என். ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற விழாவில், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுபாட்டிலுள்ள சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில் 70 வயது பூர்த்தியடைந்த 500 மூத்த தம்பதியருக்கு புத்தாடைகள், பழ வகைகள் மற்றும் மங்கலப் பொருட்களை வழங்கி சிறப்பு செய்தார்.**

இந்து சமய அறநிலையத்துறையானது திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கும், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் வகையிலும் பல்வேறு முனைப்பான திட்டங்களை செயல்படுத்திவருகிறது. திருக்கோயில்கள் சார்பில் கல்வி நிறுவனங்கள், பயிற்சிப் பள்ளிகள், மூத்த குடிமக்கள் உறைவிடங்கள், கருணை இல்லங்கள் நடத்தப்பட்டு வருவதோடு, பொருளாதாரத்தில் பின்தங்கிய 2,800 இணைகளுக்கும், 165 மாற்றுத்திறனாளி இணைகளுக்கும் 4 கிராம் தங்கத் தாலி மற்றும் சீர்வரிசைப் பொருட்களுடன் கட்டணமில்லாமல் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

2025-2026 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், "திருக்கோயில்கள் சார்பில் 70 வயது பூர்த்தியடைந்த 2,000 மூத்த தம்பதியருக்கு சிறப்பு செய்யப்படும்" என அறிவிக்கப்பட்டதை நிறைவேற்றிடும் வகையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 10.11.2025 அன்று திருவல்லிக்கேணியில் 200 மூத்த தம்பதியருக்கு சிறப்பு செய்ததை தொடர்ந்து மாநிலம் முழுவதும் திருக்கோயில்கள் சார்பில் 2,000 மூத்த தம்பதியருக்கு சிறப்பு செய்யப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2026) சென்னை, வேப்பேரி, பி.கே.என். ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற விழாவில், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுபாட்டிலுள்ள சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில் 70 வயது பூர்த்தியடைந்த 500 மூத்த தம்பதியருக்கு புத்தாடைகள், பழ வகைகள் மற்றும் மங்கலப் பொருட்களை வழங்கி சிறப்பு செய்தார். இவ்விழாவில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதினம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தவத்திரு அப்பன் உலகாரிய இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் திருமதி ஆர்.பிரியா, தயாநிதிமாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை. இரவிச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 3,000 மூத்த தம்பதியருக்கு சிறப்புச் செய்தல்!

அதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக திருக்கோயில்கள் சார்பில் 20,000 மூத்த தம்பதியருக்கு சிறப்பு செய்திடும் வகையில் சென்னை, வேப்பேரி, பி.கே.என். ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 70 வயது பூர்த்தியடைந்த 500 மூத்த தம்பதியருக்கு வேட்டி மற்றும் சட்டை, புடவை, இரவிக்கை, பழ வகைகள், மஞ்சள், குங்குமம், கண்ணாடி வளையல்கள், குங்குமசிமிழ் உள்ளிட்ட மங்கலப் பொருட்களை வழங்கி சிறப்பு செய்து, தொடங்கி வைத்தார். நேற்று தமிழ்நாடு முழுவதும் 3,000 மூத்த தம்பதியருக்கு சிறப்பு செய்யப்பட்டது.

இவ்விழாவில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதினம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தவத்திரு அப்பன் உலகாரிய இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் திருமதி ஆர்.பிரியா, தயாநிதிமாறன் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை. இரவிச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகம் டாக்டர் கலைஞர் அரங்கத்தில் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர், தென் மண்டலப் பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன், ஜோசப்ராஜ், கணேஷ்குமார் ஆதித்தன், ஆவின் ஆறுமுகம், அப்துல்காதர், விஜிலா சத்யானந்த், மைக்கேல், தமயந்தி தமிழ்ச்செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம், திருநெல்வேலி காப்பர் லீப் ஹோட்டலில் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர், தென் மண்டலப் பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று 2026 தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞான திரவியம், சித்திக், ராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.